A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**<u>மேல்முறையீட்டு மனு எண் 41 / 2023</u>**

திரு K.S. கிருஷ்ணசாமி,
த/பெ.செம்பகவுண்டர்,
29, கீழ்வாணி அஞ்சல், அத்தாணி வழி,
அந்தியூர் வட்டம், ஈரோடு மாவட்டம் – 638 502.

………மேல்முறையீட்டாளர்
(திரு K.S. கிருஷ்ணசாமி &
திரு K.S. கணேசன்)

எதிர்

1. செயற்பொறியாளர் / இ&பே/கோபி,
கோபி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.34, வெங்கட்ராமன் தெரு,
கோபிசெட்டிபாளையம் – 638 452.

2. உதவி செயற்பொறியாளர் / இ&பே/கிழக்கு/கோபி,
கோபி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.34, வெங்கட்ராமன் தெரு,
கோபிசெட்டிபாளையம் – 638 452.

3. உதவி மின்பொறியாளர் / இ&பே/ கிழக்கு/அத்தாணி,
கோபி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
5, 12, பாரதிதாசன் தெரு, அத்தாணி – 638 502.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு B. குலசேகரன் பாண்டியன், செயற்பொறியாளர் / இ&பே/கோபி
திரு R. விஜயராகவன், உதவி செயற்பொறியாளர் / இ&பே/கிழக்கு/கோபி
திரு K.N. சீனிவாசன், உதவி மின்பொறியாளர் / இ&பே/ கிழக்கு/அத்தாணி)

**<u>மனு பெறப்பட்ட நாள்: 01-06-2023</u>**

**<u>கேட்புரை நாள்: 09-08-2023</u>**

**<u>ஆணை நாள்: 17-08-2023</u>**

01.06.2023 அன்று பெறப்பட்ட திரு K.S. கிருஷ்ணசாமி, த/பெ.செம்பகவுண்டர், 29, கீழ்வாணி அஞ்சல், அத்தாணி வழி, அந்தியூர் வட்டம், ஈரோடு மாவட்டம் – 638 502 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 41/2023 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 09.08.2023 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

**1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

தனது வீட்டின் மீது சட்டத்தை மீறி அபாயகரமான முறையில் செல்லும் மின்பாதையை முழுவதுமாக அப்புறப்படுத்துமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

**2.0 வழக்கின் சுருக்கம்:**

2.1 தனது வீட்டின் மீது சட்டத்தை மீறி அபாயகரமான முறையில் செல்லும் மின்பாதையை முழுவதுமாக அப்புறப்படுத்துமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேற்கூறிய விண்ணப்பத்தின் அடிப்படையில் கள ஆய்வு மேற்கொண்டு உயரழுத்த மின்பாதையை மாற்றி அமைக்க உண்டாகும் மதிப்பீட்டுத் தொகையை செலுத்தும்பட்சத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற தகவல் இளமின் பொறியாளர்/இ.பே./கிழக்கு/அத்தாணி அவர்கள் மேல்முறையீட்டாளருக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

2.3 எனவே உயரழுத்த மின்பாதையை அகற்ற கோரி மேல்முறையீட்டாளர் கோபி மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 09.02.2023 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், கோபி மின்பகிர்மான வட்டம் 17.04.2023 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## 3.0 <u>மன்றத்தின் தீர்வு :</u>

3.1 கோபி மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 17.04.2023 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"மன்றத்தின் தீர்வு:*
> *மேற்கண்ட மனுதாரர் திரு. கீ.செ கிருஷ்ணசாமி அவர்கள் நடைபெற்ற விசாரணை கூட்டத்தில் முன்னிலையாளர். மேற்கண்ட மனுதாரர் தரப்பு வாதங்களையும் மற்றும் மின் உரிமம்தாரர்கள் அவர்களது தரப்பு வாதங்கள், சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களையும் ஆய்வு செய்யப்பட்டது.*
>
> *மேற்கண்ட மனுதாரர் தனது குடியிருப்பு மனையின் மீது அமைந்துள்ள மின்பாதையை மின்வாரியம் அகற்றிக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை தமிழ்நாடு மின்சார ஒழுங்முறை ஆணை வழங்கல் விதியின் படி ஏற்றுக் கொள்ளதக்கதல்ல என்பதை இம்மன்றம் கருத்தில் கொள்கிறது.*
>
> *எனவே, ஏற்கனவே அமைக்கப்பட்ட மின்பாதையை மாற்றி அமைக்க மின் நுகர்வோர் கோரிக்கையை எழுப்பும் பொழுது அதனை வைப்பு பங்களிப்பு வேலை (DCW – Deposit Contribution Work) திட்டத்தில் விண்ணப்பம் அளித்து, உரிய மதிப்பீட்டு தொகை செலுத்தினால் மட்டுமே மாற்றி அமைக்க வழிவகை உள்ளதை மின்உரிமம்தாரர்கள் தெரிவித்ததை இம்மன்றம் ஏற்றுக் கொள்கிறது.*
>
> *ஏற்கனவே மின்பாதை அமைக்கப்பட்டு சுமார் 50 ஆண்டு காலம் ஆகிறது. மேற்கண்ட மனுதாரர் சுமார் 50 ஆண்டுகள் கழிந்த பிறகு மின்பாதையை மாற்றியமைக்க கோருவது ஏற்று கொள்ளக் கூடியதாக இல்லை.*
>
> *அதுமட்டுமில்லாமல் சுமார் 50 ஆண்டு கடந்த நிலையில் தற்போது இழப்பீடு வழங்குவதற்கு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய விதிகளிலும் மற்றும் மின்வாரிய விதிகளிலும் வழிவகை இல்லை என இம்மன்றம் கருதுகிறது.*
>
> *எனவே மேற்கண்ட மனுதாரரின் மனுவின் மீது எந்த நடவடிக்கை எடுக்க இயலாத காரணத்தினால் மேற்கண்ட மனுதாரரின் மனுவினை இம்மன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிடுகிறது.*

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 09.08.2023 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு K.S. கிருஷ்ணசாமி மற்றும் அவருடைய பிரதிநிதி திரு K.S. கணேசன் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு B. குலசேகரன் பாண்டியன், செயற்பொறியாளர் / இ&பே/கோபி, திரு R. விஜயராகவன், உதவி செயற்பொறியாளர் / இ&பே/கிழக்கு/கோபி மற்றும் திரு K.N. சீனிவாசன், உதவி மின்பொறியாளர் / இ&பே/ கிழக்கு/அத்தாணி, கோபி மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 **<u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:**

5.1 மேல்முறையீட்டாளர் ஈரோடு மாவட்டம் அந்தியூர் வட்டம் கீழ்வானி கிராமம் D.R.காலனியில் தனக்கு சொந்தமான வீட்டு மனை (சைட் எண் 66) 2400 சதுர அடி உள்ளதாகவும், அதில் கதவு எண்.350, மின் இணைப்பு எண் 311.006.331 பெற்று பயன்படுத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

5.2 தற்போது அதில் உள்ள பழைய வீட்டை இடித்து புதிய மாடி கட்டிடம் கட்ட வேண்டி உள்ளதாகவும், மேற்படி இடத்தில் புதிய கட்டிடம் கட்ட மின் வாரியத்தின் உயர் அழுத்த (3கம்பி) மின்பாதை தடையாக உள்ளதாகவும், மேற்படி மின்பாதையை அகற்ற வேண்டி பலமுறை மனு அளித்தும் மின்பாதையை அப்புறப்படுத்த பெரும் தொகை

செலுத்தினால் மட்டுமே அகற்றப்படும் என மின் வாரியம் தெரிவித்ததாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 ஏழை மனிதர்களை பிழைக்க இயலாதவாறு மின்வாரியம் செயல்படுவது வேதனைக்குரியது எனவும், மின் உரிமம்தாரர்கள் தற்போது நடைமுறையில் உள்ள மின்சார சட்டம் 2003 பிரிவு 164–ன்படி தான் மின்பாதை அமைக்கப்பட்டதாக கூறுவது அப்பட்டமான பொய் எனவும், 50 ஆண்டுகளுக்கு முன் 2003 மின்சாரச் சட்டம் இருந்ததாக கூறுவது பொய்யானது எனவும், உயர் நீதிமன்ற தீர்ப்பின் படியாவது அப்புறப்படுத்த கோரினால் மேற்படி தீர்ப்பு தனி நபருக்கு வழங்கியதாகவும், ஒரு தனி நபர் வாரியத்தால் பாதிக்கப்பட்டதால் உயர் நீதிமன்றம் சென்று தீர்ப்பு பெற்றுள்ளார் எனவும், அதே பாதிப்பினால் பாதிக்கப்படும் தனக்கு அத்தீர்ப்பு செல்லாது என கூற இயலாது எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 தான் பொதுவாக அனைத்து மின் பாதையையும் அப்புறப்படுத்த கோரவில்லை தனது வீடு பராமரிப்பிற்கு இடையூறு ஏற்படுத்தும் தனது வீட்டு அளவிலான மின் பாதையையே அப்புறப்படுத்த கோருவதாகவும், தன்னால் DCW திட்டத்தில் உரிய மதிப்பீட்டு தொகை செலுத்த இயலாது எனவும், கட்ட வேண்டிய தொகை எவ்வளவு என்று மதிப்பீடு செய்யாமலேயே தொகை செலுத்த வற்புறுத்துவது ஏற்புடையது அல்ல எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 50 ஆண்டுகளாக மின்வாரியம் பயன்படுத்திய மின் பாதையை 50 ஆண்டுகள் அனுபோகத்திற்கு பின்பும் அவசர தேவை ஏற்பட்டாலும் மாற்ற இயலாது என்பது ஏற்க இயலாது எனவும், நுகர்வோர் குறைதீர் மன்றம் தனது மனுவை அக்கரையோடு பரிசீலிக்கவில்லை எனவும், எந்த மின்சார சட்ட விதியின்படி பாதையை அகற்ற இயலாது என கூறவில்லை எனவும், இழப்பீடு தனி நபர் பூமியை பயன்படுத்துவதற்கான வாடகை தரவும் இயலாது என்பது குறைதீர் மன்றத்தின் அறியாமையே ஆகும் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 மின்வாரியம் தன்னிடம் சிக்கிய தனி நபர்கள் மீது சட்டத்தை மீறி அதிகாரம் செலுத்த முடியாது எனவும், 50 வருடத்திற்குமேல் பயன்படுத்திய பின்பும் பாதையை அப்புறப்படுத்த பல இலட்சம் கேட்பது மேற்படி வீட்டு மனையின் மதிப்பைவிட அதிகம்

என்பதை மன்றம் கருத்தில் கொள்ளவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 ஒரு தனி நபர் தனது சொத்தின் மீது அடுத்தவர் அனுமதியின்றி ஆக்கிரமிப்பு செய்வதை தடுக்க சட்டப்படி உரிமை உள்ளதாகவும், மின்பாதை அமைக்கப்பட்டு 50 ஆண்டு காலம் ஆனால் அந்த இடம் மின் வாரியத்திற்கு சொந்தமாகிவிடுமா எனவும், தனது பூமியில் உள்ள மின் பாதையை அகற்ற மேற்படி வாரியம் மின் சட்டம் மற்றும் ஒழுங்குமுறை ஆணைய விதிகளில் வழிவகைகளை ஏன் தேட வேண்டும் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 தொகை செலுத்தினால் மேற்படி விதிகள் மாறிவிடுமா நமது நாட்டில் சட்டத்தின் ஆட்சி தானே நடக்கிறது எனவும், பணத்திற்காக மின்வாரியம் சட்டத்தின் நோக்கத்தை சிதைக்க இயலாது எனவும், மின்வாரியத்தின் எல்லா செயல்பாட்டிற்கும் பணமே முதன்மை எனில் மேற்படி வாரியம் தற்போது பல இலட்சம் கோடி இலாபத்தில் அல்லவா இயங்க வேண்டும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.9 தனது மனுவை மின் குறைதீர் மன்றத்திற்கு தனது குறையை தீர்க்கவே அனுப்பியதாகவும், தனது மனு முறையாக பரிசீலிக்கப்படாமல் தவறாக கையாளப்பட்டு மனுவின் மீது எந்த நடடிவக்கையும் எடுக்க இயலாது என தள்ளுபடி செய்வது மின்குறைதீர் மன்றம் என்ற பெயருக்கே ஏற்புடையது அல்ல என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.10 எனவே தனது மனுவை மேல்முறையீடு செய்வதாகவும், தனது வீட்டின் மீது சட்டத்தை மீறி அபாயகரமான முறையில் செல்லும் மின்பாதையை முழுவதுமாக அப்புறப்படுத்தி கொடுக்க வேண்டும் என மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:**

6.1 கோபிசெட்டிபாளையம் கோட்டம், கிழக்கு/கோபி உபகோட்டம், கிழக்கு/அத்தாணி பிரிவு அலுவலகத்திற்குட்பட்ட கீழ்வாணி கிராமத்தில் மின்னிணைப்பு எண்.311-006-331, வீட்டு உபயோகத்திற்காக திரு.கே.எஸ்.கிருஷ்ணசாமி, த/பெ.செம்பகவுண்டர்

என்பவரது பெயரில் 22.12.1993–ஆம் ஆண்டு வழங்கப்பட்டு உபயோகத்தில் இருந்து வருகிறதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 திரு.கே.எஸ்.கிருஷ்ணசாமி, த/பெ.செம்பகவுண்டர் அவர்களது வீடு அமைந்துள்ள வளாகத்தில் அத்தாணி 110/22 கே.வி. துணைமின் நிலையத்தில் இருந்து 22 கே.வி. கீழ்வாணி உயரழுத்த மின்பாதை (முன்னாள் கூகலூர் 110/22–11 கே.வி. துணைமின் நிலையத்தில் இருந்து 22 கே.வி. மேல்வாணி உயரழுத்த மின்பாதை) செல்கிறது. மேற்காணும் 22கே.வி. உயரழுத்த மின்பாதை சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 திரு.கே.எஸ்.கிருஷ்ணசாமி, த/பெ.செம்பகவுண்டர் அவர்கள், அவருக்கு சொந்தமான வளாகத்தில் செல்லும் உயரழுத்த மின்பாதையை மாற்றி அமைத்துத் தரக்கோரி 03.07.2022 மற்றும் 22.11.2022 ஆகிய தேதிகளில் புகார் மனு அளித்துள்ளதாகவும், மேற்படி புகார் மனுவிற்கு இளமின் பொறியாளர்/இ.பே./கிழக்கு/அத்தாணி அவர்களால் 20.08.2022 மற்றும் 03.12.2022 நாளிட்ட கடிதம் மூலமாக உயரழுத்த மின்பாதையை மாற்றி அமைக்க உண்டாகும் மதிப்பீட்டுத் தொகையை செலுத்தும்பட்சத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்" என்ற தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால், மேற்கண்ட மனுதாரர் உயரழுத்த மின்பாதையை மாற்றி அமைக்க நாளது வரை விண்ணப்பம் எதுவும் பதிவு செய்யவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 இந்நிலையில், திரு.கே.எஸ்.கிருஷ்ணசாமி, த/பெ.செம்பகவுண்டர், 29, அத்தாணி, கீழ்வாணி அவர்கள், மின்நுகர்வோர் குறைதீர் மன்றம், கோபி மின் பகிர்மான வட்டம் அவர்களுக்கு, மேற்படி குடியிருப்பு வளாகத்தின் மீது செல்லும் உயரழுத்த மின்பாதையினை மாற்றித் தரக்கோரி 09.02.2023 அன்று மனு அளித்ததாகவும், மேற்கண்ட மனுவின் மீது 13.03.2023 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு 17.04.2023 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 திரு.கிருஷ்ணசாமி அவர்களுக்கு சொந்தமான மனையிடத்தின் மீது செல்லும் உயரழுத்த மின்பாதையானது சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பாக, பொது மக்களின் பயன்பாட்டிற்காக வேண்டி, அப்போது தமிழ்நாடு மின்சார வாரியத்தில் நடைமுறையில் இருந்த விதிகளின்படியும், "Indian Telegraphic Act ன்டியும் அமைக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 மாண்புமிகு உயர்நீதிமன்றம், சென்னை மதுரையின் கிளையின் Writ Appeal(MD) No.932/2010 மற்றும் W.P(MD) No.2/2010 என்ற மேல்முறையீடு வழக்கு மேற்பார்வை பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், மகாராஜநகர், திருநெய்வேலி மற்றும் இளமின் பொறியாளர், பகிர்மானம், தமிழ்நாடு பின்சார வாரியம், கங்கைகொண்டான் (மேல்முறையீட்டாளர்) எதிர் 1)எம். செங்கு விஜய் மற்றும் மேற்பார்வை பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், திருநெல்வேலி (பிரதிவாதிகள்) என்ற வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பாணையானது மேற்கண்ட வழக்கிற்கு மட்டுமே பொருந்தும் என்பதால் மனுதாரரின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள இயலாது என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 எனவே, திரு.கே.எஸ்.கிருஷ்ணசாமி, த/பெ.செம்பகவுண்டர், கீழ்வாணி கிராமம், அத்தாணி அவர்களுக்கு சொந்தமான மனையிடத்தின் மேல் செல்லும் உயரழுத்த மின்பாதை சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர் பொது மக்கள் பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்டு நாளது வரை பயன்பாட்டில் இருந்து வருகிறதாகவும், இந்நிலையில், மனுதாரர் திரு.கே.எஸ்.கிருஷ்ணசாமி அவர்கள் அவரது சொந்த பயன்பாட்டிற்காக ஏற்கனவே பயன்பாட்டில் இருந்து வரும் உயரழுத்த மின்பாதையை மாற்றி அமைக்க கோருவதால், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் தற்போது நடைமுறையில் இருந்து வரும் விதிமுறைகளின்படியும், தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையத்தால் வரையறுக்கப்பட்டுள்ள வழங்கல் விதி, அத்தியாயம் 2, பிரிவு (6) (Service / live Structure and equipment shifting charge) –ன்படி மேற்படி உயரழுத்த மின் பாதையை மாற்றி அமைக்க உரிய விண்ணப்பம் அளித்து பதிவு கட்டணம் GST வரி உட்ப ரூ.2,360/– செலுத்தி பதிவு செய்யும்பட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்படும் எனவும், மதிப்பீடு அனுமதியின்படி மதிப்பீடு கட்டணத்தை (Deposit, Contribution Work) வைப்பு பங்களிப்பு திட்டத்தில் அடிப்படையில் செலுத்தினால் மட்டுமே மனுதாரரின்

மனையிடத்தின் மேல் செல்லு உயரமுத்த மின்பாதையை மாற்றி அமைக்க இயலும் எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு:</u>

7.1 மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள் எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து பார்க்கும்பொழுது கீழ்க்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக தெரிக்கின்றன.

1. மின்பாதை மற்றும் மேல்முறையீட்டாளரின் வீடு, இவ்விரண்டில் எது முதலில் நிறுவப்பட்டது?
2. மின்பாதை மற்றும் கட்டிடத்திற்கும் உள்ள இடைவெளி குறித்து விதிமுறைகளில் கூறப்படுவது யாது?
3. மேல்முறையீட்டாளரின் வீட்டிற்கும் மின்பாதைக்கும் விதிமுறைப்படி போதிய இடைவெளி உள்ளதா?
4. இவ்வழக்கில் மின் பாதையை இடமாற்றம் செய்ய வேண்டியதாக இருந்தால் அதன் மதிப்பீட்டு செலவு யாரை சார்ந்தது?

## 8.0 <u>வழக்கெழு வினா 1–ற்கான தீர்வு:</u>

8.1 மேல்முறையீட்டாளருக்கு சொந்தமான வீட்டு மனை 2400 சதுர அடி ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், கீழ்வானி கிராமம் D.R. காலனியில் உள்ளதாகவும் அதில் கதவு எண்.350, மின் இணைப்பு எண் 311.006.331 பெற்று பயன்படுத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளார். தற்போது அதில் உள்ள பழைய வீட்டை இடித்து புதிய மாடி கட்டிடம் கட்ட வேண்டி உள்ளதாகவும், மேற்படி இடத்தில் புதிய கட்டிடம் கட்ட மின் வாரியத்தின் உயர் அழுத்த (3 கம்பி) மின்பாதை தடையாக உள்ளதாகவும், மேற்படி மின்பாதையை அகற்ற கோரி முறையீடு செய்துள்ளார்.

8.2 எதிர்மனுதாரர் தனது வாதுரையில் அம்மின்பாதையானது அத்தாணி 110/22 கே.வி. துணை மின்நிலையத்தில் இருந்து 22 கே.வி. கீழ்வாணி உயரழுத்த மின்பாதை (முன்னாள் கூகலூர் 110/22–11 கே.வி. துணைமின் நிலையத்தில் இருந்து 22 கே.வி. மேல்வாணி உயரழுத்த மின்பாதை) எனவும், மேற்காணும் 22கே.வி. உயரழுத்த

மின்பாதை சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

8.3 மேலும், மின்னிணைப்பு எண்.311-006-331, வீட்டு உபயோகத்திற்காக திரு.கே.எஸ்.கிருஷ்ணசாமி, த/பெ.செம்பகவுண்டர் என்பவரது பெயரில் 22.12.1993-ஆம் ஆண்டு வழங்கப்பட்டு உபயோகத்தில் இருந்து வருவதாகவும், அலுவலக ஆவணங்களை ஆராய்ந்து பார்த்ததில் மின் இணைப்பு எண் 311-005-001 விவசாய பயன்பாட்டிற்காக திரு பொங்கியண்ணகவுண்டர் என்பவரின் பெயரில் 23.01.1960 அன்று வழங்கப்பட்டு உபயோகத்தில் இருப்பதாகவும் எனவே 22 KV உயரழுத்த மின்பாதையானது 1960-க்கு முன்பாகவே அமைக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். ஆகவே மேல்முறையீட்டாளரின் வீடு கட்டுவதற்கு முன்பே உயரழுத்த மின்பாதை நிறுவப்பட்டு பயன்பாட்டில் இருப்பது தெரிய வருகிறது. மேலும், மேல்முறையீட்டாளர் அவர்களின் வீடு அமைந்த பகுதி, முதலில் காலி இடங்களாக இருந்து பின்பு மனை பகுதிகளாக மாற்றப்பட்டது என்றும், அவ்வாறு காலி இடங்களாக இருந்த காலகட்டத்தில் மின்பாதை அமைக்கப்பட்டது என்றும், ஆனால் மேல்முறையீட்டாளர் ஏற்கனவே சென்று கொண்டிருந்த மின்பாதையின் கம்பத்தை உள்ளடக்கிய மனையை பெற்றுக் கொண்டு அதை தற்சமயம் மாற்றக் கோரி முறையிடுகிறார் என்று எதிர்மனுதாரர் தெரிவித்தார்.

8.4 சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் வாயிலாக நாம் அறிவது, மேற்கூறிய மின்பாதையானது 1960 காலகட்டத்திற்கு முன்பே பயன்பாட்டில் இருந்து வருவதும், அதன் பிறகு 1993-இல் தான் மேல்முறையீட்டாளரின் வீட்டில் மின் இணைப்பு பெற்றதும் தெரியவருவதால் மின்பாதையே முதலில் நிறுவப்பட்டது உறுதியாகிறது.

## 9.0 <u>வழக்கெழு வினா 2-ற்கான தீர்வு:</u>

9.1 இது சம்பந்தமாக மின்பாதைக்கும் கட்டிடத்திற்கும் உள்ள இடைவெளி குறித்த விதிமுறைகள் பற்றி அறிந்து கொள்ள நாம் CEA (measure relating to safety and electric supply) Regulations 2010 இன் 61 வது விதியை ஆராய வேண்டும். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"61. Clearances from buildings of lines of voltage exceeding 650 V-*

*(1) An overhead line shall not cross over an existing building as far as possible and no building shall be constructed under an existing overhead line.*

*(2) Where an overhead line of voltage, exceeding 650 V passes above or adjacent to any building or part of a building it shall have on the basis of maximum sag a vertical clearance above the highest part of the building immediately under such line, of not less than-*

| | |
|---|---|
| *(i) for lines of voltages exceeding 650 Volts up to and including 33,000 Volts* | *- 3.7 metres* |
| *(ii) for lines of voltages exceeding 33 kV* | *- 3.7 metres plus 0.30 metre for every additional 33,000 Volts or part thereof.* |

*(3) The horizontal clearance between the nearest conductor and any part of such building shall, on the basis of maximum deflection due to wind pressure, be not less than-*

| | |
|---|---|
| *(i) for lines of voltages exceeding 650 V up to and including 11,000 Volts* | *- 1.2 metres* |
| *(ii) for lines of voltages exceeding 11,000 V and up to and including 33,000 V* | *- 2.0 metres* |
| *(iii) for lines of voltages exceeding 33 kV* | *- 2.0 metres plus 0. 3metre for every additional 33kV or part thereof* |

*(4) xxx xxxx xxx*
*(5) xxxx xx xxxx"*

*Explanation: - For the purpose of this regulation the expression "building" shall be deemed to include any structure, whether permanent or temporary."*

9.2 மேற்கண்ட விதிகளை கூர்ந்து படிக்கும் பொழுது நாம் அறிவது என்னவென்றால் நிறுவப்பட்ட கட்டிடத்திற்கும் நிறுவப்பட்ட மின்பாதைக்கும் இடையே உள்ள செங்குத்து இடைவெளி (Vertical clearance) *3.7 metres* இருக்க வேண்டும் என்றும் தெரியவருகிறது.

## 10.0 <u>வழக்கெழு வினா 3-ற்கான தீர்வு:</u>

10.1 எதிர்மனுதாரர் அளித்த ஆவணங்களின் வாயிலாக மேற்கூறிய 22KV மின்பாதைக்கும் மேல்முறையீட்டாளரின் வீட்டிற்கும் உள்ள செங்குத்து இடைவெளி 13 அடி உள்ளதாக தெரியவருகிறது. இது பாதுகாப்பு விதியில் கூறப்பட்ட இடைவெளியை விட அதிகமாக உள்ளது.

## 11.0 <u>வழக்கெழு வினா 4-ற்கான தீர்வு:</u>

11.1 மேல்முறையீட்டாளர் தனக்கு சொந்தமான மனையில் உள்ள பழைய வீட்டை இடித்து புதிய மாடி கட்டிடம் கட்ட வேண்டியுள்ளதாகவும், மேற்படி இடத்தில் புதிய

கட்டிடம் கட்ட மின்வாரியத்தின் உயரழுத்த மின்பாதை தடையாக உள்ளதாகவும், எனவே மேற்படி மின்பாதையை அகற்ற வேண்டி விண்ணப்பித்துள்ளார்.

11.2 எனவே, மின்பாதை இடமாற்றம் செய்ய ஆகும் மதிப்பீட்டு செலவு யாரை சாறும் என்பதை அறிய தமிழ்நாடு மின்சார வழங்கல் விதி தொகுப்பு விதி 5(6)–ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> ***"மின்இணைப்பு/மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் மாற்றல் கட்டணம்:***
> *(1) மின்னிணைப்பு / மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் இடமாற்றுவதற்கான கட்டணத்தை நுகர்வோரே ஏற்க வேண்டும். மதிப்பீடு செய்யப்பட்ட இடமாற்றத் தொகையை நுகர்வோர் முழுமையாக முன் கூட்டியே கட்டிவிட வேண்டும். மதிப்பீட்டின் நகல் நுகர்வோருக்கு வழங்க வேண்டும். அத்தொகை செலுத்தப்பட்ட பின்னரே இடமாற்ற பணி மேற்கொள்ளப்படும். "*

11.3 மேற்கூறிய விதியை ஆராயும்போது மேல்முறையீட்டாளரின் வீடு கட்டுவதற்கு முன்பே எதிர்மனுதாரரின் மின்பாதையானது அமைக்கப்பட்டுவிட்ட காரணத்தினால் தற்சமயம் பாதுகாப்பாக நிறுவப்பட்ட நிலையிலிருந்து மின்பாதையை இடமாற்றம் செய்ய மேல்முறையீட்டாளர் கோரும்பட்சத்தில் உரிய மதிப்பீட்டு தொகையை மேல்முறையீட்டாளர் செலுத்த வேண்டும் என்பது தெரிய வருகிறது.

**12.0 <u>முடிவுரை</u>:**

12.1 மேற்கூறிய பத்திகளில் உள்ள தீர்வின்படி,

(i) மேல்முறையீட்டாளரின் வீட்டிற்கும் உயரழுத்த மின்பாதைக்கும் உள்ள இடைவெளி பாதுகாப்பு சேமவிதிமுறைகளின்படி போதிய இடைவெளியுடன் அவருடைய தற்சமயம் வசிக்கும் வீடு கட்டுவதற்கு முன்பே இருப்பது தெரியவருகிறது.

(ii) எனவே, மேல்முறையீட்டாளர் மின்பாதையை மாற்ற விரும்பினால் தமிழ்நாடு மின் பகிர்மான விதிமுறைகளின் படி மின்பாதையை மாற்றியமைப்பதற்கு ஆகும் உரிய தொகையை செலுத்தும்பட்சத்தில் மின்பாதையை மாற்றியமைக்க எதிர்மனுதாரருக்கு உத்திரவிடப்படுகிறது.

12.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 41/2023 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

<u>பெறுநர்</u>

1. திரு K.S. கிருஷ்ணசாமி, – <u>By RPAD</u>
த/பெ.செம்பகவுண்டர்,
29, கீழ்வாணி அஞ்சல், அத்தாணி வழி,
அந்தியூர் வட்டம், ஈரோடு மாவட்டம் – 638 502.

2. செயற்பொறியாளர் / இ&பே/கோபி,
கோபி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.34, வெங்கட்ராமன் தெரு,
கோபிசெட்டிபாளையம் – 638 452.

3. உதவி செயற்பொறியாளர் / இ&பே/கிழக்கு/கோபி,
கோபி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.34, வெங்கட்ராமன் தெரு,
கோபிசெட்டிபாளையம் – 638 452.

4. உதவி மின்பொறியாளர் / இ&பே/ கிழக்கு/அத்தாணி,
கோபி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
5, 12, பாரதிதாசன் தெரு, அத்தாணி – 638 502.

5. மேற்பார்வை பொறியாளர், – By Email
**கோபி** மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கட்சேரி தெரு, கோபிசெட்டிபாளையம் – 638 452.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – <u>**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.